சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞு (1889-ம் ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

செப்பித்தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40

புத் 94 ] யாழ்ப்பாணம்:- ருதிரோற்காரி ஞு, சித்திரை மீ 22, 29-4-83, 6, 13-5-83 வெள்ளிக்கிழமை [இல -17,

## அனைத்துலக ஆராய்ச்சி அவை அவசியம்

———0———

மாணிக்கவாசக சுவாமிகள் காலத்து அரிமர்த்தன பாண்டியனும் கஜபாகு என்ற இலங்கைச் சிங்கள மன்னனும் நிகழ்ச்சிகளிலே தொடர்புள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இந்த அரிமர்த்தன பாண்டியன் என்ற வரிசையிலே எண் இலக்கம் என்ன என்பது குறிக்கப்படாமையும் அவ்வாறே கஜபாகு அரசனின் எண் இலக்கம் காட்டப்படாமையும் மாணிக்கவாசக சுவாமிகளின் கால நிர்ணயத்துக்கு வழி வகுப்பதற்குரியவகையில் உதவவில்லை.

கிறிஸ்துவுக்குப் பின் ஆயிரம் ஆண்டுக்காலத்துக்குள்ளேயுள்ள நிகழ்ச்சிகள் மாணிக்கர், சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற சமயகுரவர்களதும் நாயன்மார்களதும் வரலாற்றுக்குரியன என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஆராய்ச்சி இந்த ஆயிரமாண்டுகளையும் இதற்கடுத்த இரு நூற்றாண்டுகளையுமட்டும் எடுத்துக்கொண்டால் ஆய்வு சுலபமாயிருக்கும்.

இனி ஆராய்ச்சி ஒன்றுமுகமாக நடைபெற்றாலன்றிப் பயனளிக்காது. எல்லாச் சமயங்களுக்குரிய நிகழ்ச்சிகளும் அவ்வாறே மொழி இனம் பற்றிய நிகழ்ச்சிகளும் ஒருங்காராயப்படுதல் வேண்டும்.

எனவே, அனைத்து நிகழ்ச்சிகளின் அனைத்துலக ஆராய்ச்சி அவை அவசியமாகின்றது.

ஒரு நிகழ்ச்சியை எடுத்தாராயுங்கால் பூகோள, இதிகாச புராண வரலாற்று நூல்களும், அக்கால மன்னர்கள் வரலாறும், கல்வெட்டுகள் சாசனங்களும் பொருத்தமாக வரும் என்ற வகையிற் பரந்ததோர் ஆய்வுக்கிடமுண்டு.

இவ்விதமான ஆராய்ச்சி தனித்தொருவரால் இருவரால் நிகழ்த்த முடியாது; நிகழ்த்தினும் முற்றுகாது.

ஆகவே ஆய்வுக்கோர் அவை தேவை. அந்த அவை பலவேறு அங்கங்களாகப் பிரிந்து ஆய்வு நடத்திப் பின் பேரவையிற் பேராய்வுசெய்து முடிவுகளுக்கு வர முற்படவேண்டும். இப்பணி இலேசானதல்ல. இரண்டு மூன்று திங்களிலோ ஆண்டுகளிலோ செய்து முடிக்கப்படக் கூடியதல்ல.

( வளர்ச்சி 3 ஆம் பக்கம் )

## திருவாசகம் முற்றோதல்

15-5-83 ஞாயிறு

திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சி ஸ்ரீமதி சடையம்மா - அறுபத்து மூவர் குருபூசைமன்ற மடாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ் - நல்லூர் திருநெல்வேலி கிழக்கு - வெள்ளைப் பிள்ளையார்கோவில் அருகாமையில் அமைந்துள்ள மடாலயத்தில் 15-5-83 ஞாயிறன்று காலை 5.00 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாகும் என சைவப்பெரியார் சி. தம்பையா தெரிவிக்கின்றார்.

## திருவாசகமும் திருக்கோவையாரும்

[ கவிஞர். முருகவே. பரமநாதன் ]

''தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்''

அழகான செல்வச் செவிலிகள். கண்டவர் எவரும் வாரி வாரி எடுத்து முத்தம் கொடுக்காமல் இருக்க முடியாது. ஒன்று ஆண் குழந்தை, மற்றது பெண். ஒரே சூலிற்பிறந்த இரட்டைக் குழந்தைகள் என்று சொன்னாற் கூடமிகையன்று. அள்ளிச் சொரியும் ஆண் குழந்தையிற் சொக்காதவர்கள் எவருமே இல்லை. கள்ளூறு தேன்போன்ற அவனது (இதழமுகத்தைப்) பருகும் எவரும் தெவிட்டுதலின்றி நிற்கிறார்கள். அப் பெண்குழந்தையைச் சீண்டுவது எவர்க்கும் முடியவில்லை. கலைஞானிகள், கற்றறிந்த நூல் வல்லார் எல்லாம் அவளைக் கண்டு நெஞ்சைப் பறிகொடுக்கிறார்கள். பூவும் பொட்டுமாய், மஞ்சளும் குங்குமமுங் கொண்டு மணப்பந்தலிலே அவள் நிற்பதைக்கண்டு தம்மைமறந்தவர்கள் பலர். என்றாலும் காணத்திரைமறைவில்- அவளுடைய கற்பு ஒருவனையன்றி உருவறியாது. சிவனையன்றிச் சிந்தியாது. பாவை பாடியவாயாற் கோவை பாடென்றார், அழகிய சிற்றம்பலமுடையார். நிரம்ப அழகியவரின், வாக்குப்படி திருவாதவூரர் திருக்கோவையாரும்- திருவாசகமும் பாடினார். அவை எட்டாந்திருமுறையாகத் திகழ்கின்றன. திருவாசகம் தேனுய் இனிப்பது போல. பாலாய்ச்சுவைப்பது திருக்கோவையார். பாலுந் தெளி தேனும் பாங்காய்க் கலந்தாலெப்படியமையும், அவ்வாறே இந்த இரட்டைக் குழந்தைகளும். கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச் சிறந்த அடியார் சிந்தையுள் தித்திக்கின்ற சிவநூல்கள். ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் ஐக்கியப் படுத்தும் ஆகர்ணசக்தியுடையன.

ஆன்மாவைத் தலைவியாயும். எல்லாம் வல்ல இறைவனைப் புருடோத்தமனுயும் கொண்டு பாடிய நூல் கோவையார். பெண் ஆணையடைந்து இல்லறம் நடாத்த இயைவது போல, ஜீவாத்மா பரமாத்மாவைச் சேரத்துடிக்கும் காட்சிகள் சிந்தனைக்குரியவை. என் பொல்லாமணியைப் புல்லிப்புணர்வதென்று கொலோ என ஏங்குகிறார் மணிவாசகர். ஆண்டாளும் மீராவும் மதுரபக்தியை நிலைநாட்டிய பெண்மணிகள். வாள்முனையில் நடப்பது போன்றது இது என்பர் பெரியோர்.

காதல் முதிர்ச்சியாலே தக்க தலைவனுடன்- தலைவி தன் ஆசாரத்தையும். அகலிடத்தையும் விட்டு, செவிலித்தாய்ந்த மட்டும்- தெரிந்தும் தெரியாதநிலையில் பாலைநிலத்தின் வழியே செல்கிறாள். பாலைவனமோ கொடியது, செந்தழலைப் பிழிந்து ஆறாக ஓடவிட்டாற் போன்ற கான்யாறு. நெருப்பைத் தகடாக்கிப் பரப்பினாற்போன்ற அக்கினிப்பிழம்பு போன்ற இந்தப் பொடி பறக்கும் கானலிலே, காதற்சோடிகள் இருவரும்- அடிக்கு மேல் அடி வைத்து முன்னும் பின்னுமாக அன்பனைத்து நடக்கிறார்கள். இவர்களுடைய அன்ன நடை பார்ப்பவர்கட்கு, பாலை நிலத்தில் நீந்துவது போல இருக்கிறது. சீதை இராமன் காடேகிய போது நின்பிரிவிலும் சுடுமோ காடென்று கூறிப் பிரிவு நிலைமையின் வெம்மையை நெஞ்சை அள்ளும்படி சொன்னாள்? ஆம். பிரிவு பாலை நிலத்திலும் கொடிது. இந்தக் காட்சியை மணிவாசகர் பாடுகிறார்.

( வளர்ச்சி 2 ஆம் பக்கம் )

போன்று மொழிப்பணியாற்றிய முதறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் நினைவாக முத்திரை வெளியிடப்படுவது விசேடமே.

தமிழ் ஆராய்ந்து அறிந்து அம் மொழிப் பழம்பெரும் நூல்களை எல்லாம் இம் மொழி பேசும் இனத்தாருக்கு மட்டுமன்றி மொழி வளம் பழகும் பல்கலைப் பண்டிதர்களுக்கும் பயன்படும் வண்ணம் தொடர்ந்து பதிப்பித்துப் பேணிய இந்தப் பேரறிஞர்கள் சைவ சமயத்தவர்களாவர் அந் நெறியையும் ஒரே சேவையில் மக்கள் வருக்க வழி செய்தனர் என்ற உண்மையை எடுத்துக் காட்டுதலே பொருத்தமானது.

இந்த நெடு மரபு வழிவந்தவர்கள் எந்த நெறியிற் கல்வி கற்றுத் தேறி அதன் பயனுக மொழித்தொண்டும் மதப்பணியும் ஆற்றினர் என்பதைச் சிந்திக்கும்பொழுது இவர்கள் யாவரும் கல்வி கற்றல் கற்பித்தல் கற்பிக்க வழி வகுத்தல் என்று மூத்தரத்திலும் ஊக்கமுடைத்தவர்களாய் விளங்கினர் என்பது வெளிப்படையாகின்றது.

நாவலர் நற்றவையார் தமிழ்க் காவலராகவிருந்து வழி காட்டிய வகையிலே அன்னாரின் தனய நட்பினர் தாமோதரனும் தமதூராகிய ஏழாலை மூதூரிலே சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவியது மட்டுமன்றி நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் பின் ஆசானுயமர்ந்த சுன்னைக் குமாரசுவாமிப் புலவரை ஆசிரியராயமைத்து அவர்களுக்கு மாதவீதம் வேதனமும் வழங்கினர், வேதனமோ ரூபா பத்தே; இந்தச் சைவப்

(வளர்ச்சி 8 ம் பக்கம்

## முன்னோர் தமிழ் நூல்களுக்கு முத்திரையிட்டாற் போன்று மொழிப்பணியாற்றியவர் நினைவாக முத்திரை வெளியீடு

ஆன்றோர் அளித்த அருங்கலைக் களஞ்சியத்தில் அவராத இன்பம் அநுபவித்து முன்னோர் பணியைப் பின்னும் புதுப்பித்த மரபுக்குத் தலைவர் ஆற்றல்மிக்க ஆறுமுகநாவலர்.

அம்மரபினைப் பேணி அவ்வழி மொழித்தொண்டாற்றியவர்களில் நாவலர் காலத்தவரும் அவர் தம் பெருநட்புக்காளானவரும் ஆகிய சிறுப்பிட்டி ஊர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களை அடுத்தாற் போல எடுத்துக் கூறலாம்.

இம்மரபினிற் பின்னுள் விளங்கிய வித்துவசிரோமணி வேதியர் சி. கணேசர் நூற்றாண்டு நிறைவு சென்ற திங்களில் நிகழ்ந்தமை தமிழ் அன்பர்களுக்கு பேருவகை பெருக்கியது இவ்வாண்டில்முன்னோர் தமிழ் நூல்களுக்கு முத்திரையிட்டாற்

உ
திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

ருதிரோத்காரி ஞு சித்திரை மீ
22 - 4-83 13-5-83, வெள்ளி

## ஐயம் திரிபு அகற்ற ஆருமில்லையா?

•••○•••

தொன்று தொட்டு நின்று வருகின்றது ஒரு நிகழ்ச்சியென்றால் அது வழமையாகின்றது, வழமையுமோ சட்ட மதிப்பைப் பெறுகின்றது. இந்த நிலைமை ஒரு பொது வகையினது.

சட்டங்களை இயற்றுபவர்கள் இக்காலத்திலே மக்கள் தேர்ந்தெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களே. இவ்வாறு அமைக்கப்படும் சட்டங்களுக்கு உள்ளவாறு விளக்கம் கொடுக்கும் உரிமை நீதிமன்றுக்குண்டு.

இயற்றப்பட்ட சட்டங்கள் யாவும் இழுக்கும் வழுவும் இல்லாதன என்று எவரும் சொல்லமுடியாது! என்னை இவற்றுட் சிலவற்றுக்கு மாறான விளக்கங்களை நீதிமன்றுகள் வேண்டுங்கால் அளித்திருக்கின்றன.

இந்நாட்டுப் பாராளுமன்றம் கோயில்களிலே மிருகங்களைப் பலியிடுவதை நிறுத்தவோர் சட்டத்தை இயற்றி இருக்கின்றது; எனினும் இச் சட்டம் பலி நிறுத்தலைதைச் செயல் முறையிற் றடுக்கும் நடைமுறையை விரிவாக்கவில்லைப்போலும்! இந்த நிலைமை எந்தச் சட்டத்துக்கும் இயல்பாயுள்ளவோர் விபரீதம். பலி நிறுத்தச் சட்டத்தை மறுக்க வழியுண்டென்று எண்ணியவர்கள் நீதிமன்றில் இந்த நிலைமைக்கு விளக்கம் பெற வழி வகுத்ததன் பயனாக மலலாகம் மாவட்ட நீதிமன்றிலே கவுணாவத்தை வைரவர் கோயிலிலே உயிர்ப் பலியிடுவது நிறுத்தப்படலாமா என்ற கேள்வி எழுந்தபொழுது வழமையை மறுக்கக்கூடிய சட்டம் செயற்பாட்டில் இல்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்தீர்ப்பு மேன் முறையீடு செய்யப்பட்டு மாற்றப் படடாலன்றி நிலவும். இது யாவரும் அறிந்த உண்மை.

இந்த வேளையிலே சமய நெறிபற்றி எடுத்துரைக்கும் கடமையுடைய எமக்கும் கோவில்களிலே உயிர்ப் பலிக்கு வழி கோலப்படுவதைப்பற்றிச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு சமயத்தைச் சார்ந்தவர்கள் யாம் என்று கூறுகின்றவர்கள் எல்லோரும் சமயிகளல்லர். வழமையைப் புறம்பாக வைத்து வேத சிவாகம நெறி எவ்வாறு மெய்கண்ட சாத்திரங்களிலும் திருமுறைகளிலும் எடுத்தாளப்பெற்றதோ அவ்வாறு ஒழுகுகின்றவர்களையே நாம சமயிகள் என்று பிரித்துக் காட்டுகின்றோம்.

சமயிகள் எந்த வேளையிலும் மிருகபலி செய்யவோ செய்விக்கவோ மாட்டார்கள். காரணம் அவர்கள் ஊன் உண்ணாப் புனிதர்கள்

சமயிகள் அல்லாதவர்களில் ஒருசாரார் ஆலயங்களிலே மிருகபலியைப் பழியென அஞ்சுகின்றனர். அவ்வாறானவர்கள் இந்தச் சந்தர்ப்பததில என்ன செய்ய வேண்டும்என்பதே பேச்சு.

பலியிடுதல் என்றாற் கொல்லாமையை மறுத்தல் என்றே பொருள் பெறும். வேத சிவாகம நெறியையே திருமுறைகளும் நாயன்மார்களின் அருள்மொழிகளும் எடுத்து விரித்திருக்கின்றன.

திருமூலநாயனார் இப் பழிச்செயலை எடுத்துக் காட்டுகின்றார்?

கொல்லிடு குத்தென்று
கூறிய மாக்களை
வல்லடிக் காரர்
வலிக்கயிற்றாற் கட்டிச்
செல்லிடு நில்லென்று
தீவாய் நரகிடை
நில்லிடும் என்று
நிறுத்துவர் தாமே.

இதனை மேலும் விரித்துரைக்க வேண்டியதில்லை உலகியல் ஒழுக்க நெறி உரைத்த திருவள்ளுவநாயனார் உணர்த்துவதை உற்று நோக்குவாம்.

அறவினை யாதெனிற்
கொல்லாமை
தன்னுயிர் நீப்பினும்
செய்யற்க தான்பிற(து
இன்னுயிர் நீக்கும் வினை

பிறிதோர் உயிரைப் பிரிக்கும் தொழிலை மறந்தும் செய்யற்க. இவ்வளவும் இதனை இனிது விளங்க வைக்கும்

எனினும் இந் நிலைமையிலே சைவசமயிகள் செயற்பாலதென்ன என்ற கேள்வியை நாமே கடாவி விடையையும் விளக்குவாம்

சட்டம் பெரிது. தாரணி சட்டமின்றி நிலவ ஒண்ணாது

எனவே சட்டம் இயற்றுவிப்போம் இரட்டுறமொழிதல் இரு வேறு கருத்தாதல் எனறு வழுவிலாதவாறு ஆலயங்களிலே மிருகபலி நிறுத்தச்சட்டம் திருத்தியமைக்கப்பட்டு அச்சட்டம் நடைமுறையில இயங்க வேண்டிய வழிமுறை வகுக்கப்பட்டு எவ்வாற்றானும் கோயிலிற் பலியெனும் படுகொலை நிகழாவண்ணமும் அரசியல் பிழையாவாறும் ஆவன செயற்படுத்த மக்கள் உரிய ஒழுங்கினைக் கையாள வேண்டும்

அந்தணர் நூற்கும்
அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க நாடாளு மன்றக் கோல் கோடாது, உரிமை வாடாது உலகில் வாழச் சட்டம் வேண்டுவோம்.

இவ்விடத்திலே வள்ளுவனாரின் இன்னொரு கருத்தும் பொருத்தமாகின்றது.

கொலைமேற்கொண்டாரின்
கொடிதே அலைமேற்
கொண் டல்லவை செய்
தொழுகும் வேய்ந்து'.

## திருவாசகமும் திருக்கோவையாரும்

[ 1 ம் பக்கத்து வளர்ச்சி ]

"அன்பணைத் (து) அஞ்சொல்லி பின் செல்லும் ஆடவன்நீடு
அவன்றன்
பின்பணைத் தோளி வரும் இப்பெருஞ்சுரஞ் செல்வதன்று
பொன்பணைத் தன்ன இறை உறை தில்லைப் பொலிமலர்மேல்
நன்பணைத் தண்நற (வு) உண் அளி போன் றொளிய
நாடகமே"

இக் காட்சி ஓர் அசல் நாடகமே. எப்படிச் செல்கிறார்கள். அவ்வாடவன் அவளை அன்பினால் அணைத்து அவள் பின்னாற் செல்கிறான். முன் செல்ல நாணமடைந்து அவன் பின்னே நீண்ட நேரம் தொடர்ந்தாள். இவர்கள் பரந்த பாலை நிலத்தைக் கடந்து செல்வதாகவே தெரியவில்லை. படைபதைக்கும் வெயிலிற்கூட அணி நடை போடுகிறார்கள். இக் காட்சி தில்லையம்பலத்திலே அமர்ந்துள்ள அழகான நறுமலர் மேலே தேனையுண்ணும் வண்டுகள் போன்றிருந்தது. ஆனந்தத் தேன் சொரிபவன் இறைவன். அந்தத் தேனையுண்டு செம்மாந்தவர் மணிவாசகர். எனவே தினைத்தனைய பூவினிலே தேன் உண்ணாது நினைத்தொறும் பேசுந்தொறும்- என் எப்போதும் அனைத்தெலும்புள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ என்றார். இக் காதற் சோடிகள் போகின்ற காட்சியை இனிக் காண்போம். இப்பாடல் தலைவனுடன் தலைவி உடன் போகும் நிலைமைவிளக்குகிறது.

அன்பு அணைத்த அம் சொல்லிப் பின் செல்லும் ஆடவன்- அன்பினால் அணைத்த அழகிய சொல்லையுடைய தலைவியின் பின் செல்கின்றான் தலைவன். அவன் பின்பணைத்தோளிநீடு வரும். அவனுக்கு முன் செல்ல வெட்கப்பட்டு அவனது பின்னே மூங்கில் போலுந் தோளையுடைய தலைவி நீண்டநேரஞ் சென்றாள். இப்படி இவர்கள் செல்வது பெரிய பாலைவனத்தைக் கடப்பது போலக்காண்பதாயில்லை. பரமாத்மா ஜீவாத்மாவைப் பின்தொடர்கின்றார். இறைவனை ஆணாகவும் அதாவது நாயகனாகவும், ஜீவாத்மாவை நாயகியாகவும் பாவித்துப்பாடிய திருக்கோவையார் மதுரபக்தியை மணிமணியாகக் காட்டியுள்ளது. பாரதியார் கண்ணனைப்பல நிலைகளிலே பாடினார். காதலனாயும், காதலியாயும் கூடக்கவி செய்துள்ளார். அந்த மரபு கூடக் கோவை கண்டவழியாகும் எனலாம். உடன் போக்கை விளக்கும் இப்பாடலுக்கு இலக்கியமாகத் திகழும் திருவாசகத்தை இனிப்பார்போம்.

"பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து நீ
பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா
ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே
சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன் எங்கெழுந்
தருளுவதினியே

ஜீவாத்மாவை இறைவன் தன்னோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தினாலே ஜீவாத்மாவின் பின்னாலேயே தொடர்ந்து கொண்டிருக்கிறார். ஆனால் ஜீவாத்மாவோ எப்பொழுதும் இறைவனை விட்டுவிலகித்தூரவே சென்றுகொண்டிருக்கிறது. இதனையே புறம்புறந்திரிந்த செல்வமே என்றும்; அன்பணைத்த அம் சொல்லிப் பின் செல்லும் ஆடவன் என்றும் குறிப்பிடுகின்றார்.

பிரிவுத்துயர் என்பது பொல்லாதது புத்திர சோகத்தாலே தசரதனே உயிர்நீத்தான். கன்றைப் பிரிந்த பசுவின் நிலையும்- சேயைப் பிரிந்த தாயின் நிலையும்- காதலனைப் பிரிந்த காதலியின் நிலையும்- உயிர் நண்பனை இழந்த ஒருவனுடைய நிலையும் உள்ளத்தையே உருக்கிவிடும். ஏன் பறவையினத்தில் அன்றில கூடக்காதற்சோடிகளாய் வாழ்கின்றன. ஒன்று பிரிந்தால் மற்றது உயிரை இழந்துவிடுகிறதென்றால் பிரிவு எவ்வளவு பொல்லாதது என்பது வெளிப்படையாகும்.

பிரிவின் நிலையைப் பாரதியார் நரகவேதனையென்று குறிப்பிடுகின்றார். "மோனத் திருக்குதடி இந்த வையகம்- மூழ்கித்துயிலினிலே, நான் ஒருவன் மட்டிலும்- பிரிவென்பதோர்- நரகத்துழலுவதோ" என்பது அவர் வாக்கு. உலகம் ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்திருக்கக் காதலன் கண்துஞ்சாது- பாலும் கசந்து படுக்கையும் நொந்தலைக்கத் துடித்துக்கொண்டிருக்கும் நிலைமை காதல் வாழ்விலே கொடியது பிரிவுத்துன்பமென்பதைப் புலப்படுத்துகிறது. இவ்வாறே இறைவனைவிட்டு ஆத்மா பிரிந்திருக்க முடியாது. காதலன் பொருள் தேடுவதற்காகவும் கல்வியபில்வதற்காகவும், யுத்தத்திற்காகவும் காதலியை விட்டுப் பிரிவதுண்டு. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தம் நான்கினுட் பொருள் இன்றியமையாதது. பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை, அருளிலார்கு அவ்வுலகம் இல்லை என்பது குறள் மொழி. மூதாதையர் தேடிவைத்த பொருளுக்குப் பாத்தியதை கொள்வது இழிவானது. தம்மிடமுள்ள பொருளைச் செலவழிப்போர் உளர் எனப்படார், இல்லாதவர் வாழ்வு எற்றிலும் இழிவானது. எனவே பொன் ஒன்றே இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணையானது அப்புதிய தம்பதிகள் எல்லாம் நிறைந்தவர்கள். ஆயின் அந்த ஆண் மகனுக்கோ ஒரு குறை தானே பொருள் தேடித் தன்நிறைவு காண வேண்டும். எனவே கடல் கடந்து சென்று திரவியந் தேட எண்ணினார். இதைஎப்படிக் காதலியிடம் சொல்வது என்ற மனப்போராட்டம். பல நாட்களாக எண்ணி யெண்ணித் திட்டம் போட்டும் எண்ணம் நிறைவேறவில்லை, இருந்தாலும் வேறுவழியின்றி ஒரு நாள் மனைவியிடம் பேச்சைத் தொடங்கினான். முற்றுந் துறந்த முனிவர்களானாலும் முடிமன்னர்களானாலும் பொன்னின்றி வாழமுடியாது என்று முடிப்பதற்குள் காதலியின் கண்கள் குளமாயின. அப்பப்பா என் கணவர் என்னைவிடப் பொன்பெரிதென்று எண்ணிவிட்டாரே. ஏழேற் பிறவியிலும் பிரியேன் என்றவர் பொன் தேடுவதற்காக- என்னை விட்டுப் பிரியப் போகின்றாரே- என்றெல்லாம் எண்ணத் தொடங்கினாள். அவ்வளவுதான் மயங்கி விழுந்தாள். அவன் மெல்லத் தாங்கி பக்கத்திலுள்ள கூசாவில் உள்ள நீரை எடுத்து முகத்திலே தெளித்தான். காற்று வரும்படி வீசினான். கைகால்களைத் தேய்த்தான். சற்று நேரத்திலவள் பிரக்ஞை தெளிந்து மெல்ல- மெல்ல விழி விழித்தாள். இன்பமே; அன்பமே; என்னுடைய அன்பே, உன்னிலும் பொன்னை பெரிதெனப் பேணுவேனோ? நீ ஏன் வருந்த வேண்டும் என்று கூறினான். அப்பொழுதுதான் அவள் சுயநிலையை அடைந்தாள், அடைந்ததும் பதைபதைத்து எழுந்தாள். காதலனின் பாதத்திலே தலையை வைத்து வணங்கி "என்னைப் பரிதபிக்க விட்டு விட்டு' பொருள் சம்பாதிக்கச் சென்ற நீங்கள் இப்படி நீண்ட நாட் கழித்து வரலாமா என்று பணிவுடன் கேட்டாள். இவ்வுலகிலே தபோதனர்க்கும், மன்னர்க்கும பொன்னே முதன்மையாய்த் தேவைப்படுகிறது என்று சொன்ன உடனேயே கணவன் பொருள்தேடச் சென்று விட்டான் என்று எண்ணி விட்ட தலைவியின் பிரிவு நிலையை மாணிக்கவாசகப் பெருமான் சொல்லிலே வடித்துத் தருகினார்.

(வளரும்)

# அப்பர் சுவாமிகள் கண்ட
# ஐயாறன் அடித்தலம்

— "உமாபதி" —

தமிழ் நாட்டின் தவப்பயனாய்த் தோன்றிய சைவ குரவராகிய அப்பர் சுவாமிகள் திருக்கைலாச மலைக்குச் சென்று "ஆளும் நாயகன் கைலையிலே இருந்த கோலத்தைக் கண்டல்லது மாளும் உடலைக்கொண்டு மீளேன்" என்னும் உறுதியோடு உடல் தேய்ந்து வருந்திக் கிடந்த நேரத்திலே கருணைக் கடலாகிய சிவபெருமான் அவரைத் திருவையாற்றிலே கைலையிலிருந்த கோலத்தைக் காட்டுவதாகக்கூறி தமிழ்நாட்டிற்கே அனுப்பிவைத்தார். இப்படிச் செய்தது தமிழ் நாட்டவர் அப்பர் சுவாமிகள்மூலம் மேலும் பல தேவாரப் பதிகங்கள் பெற வேண்டுமென்ற பெருங்கருணையினாலாகும்.

திருவையாற்றிலே உள்ள அசைகின்ற அசைவில்லாத பொருட்களிலெல்லாம் சிவத்தையே கண்டு 'கண்டறியாதன கண்டேன்' என்று பேரானந்தத்தோடு அப்பர் சுவாமிகள் பல பதிகங்கள் பாடியுள்ளார். கைலைக் காட்சியின் பின் திருவையாற்றிலே பாடிய பதிகங்கள் பல அரிய கருத்துக்களை உள்ளடக்கியனவாயும் மனதை உருக்குவனவாயும் விளங்குகின்றன. உதாரணமாகப் பின்வரும் பாடலை நோக்குவாம்.

"சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப் பிறையணிந் தாடும் ஐயாறன் அடித்தலமே;

ஐயாறன் அடித்தலம் என்பது இறைவனின் அருட்சக்தி. உலகிலே இறைவன் உண்டென்று நம்பி இறையருளை உணர்ந்து வழுத்தி வாழும் மக்கள் அரியரன்றோ? இறைவனருளின் பெருமை அளவிடற்கரியது. சிந்திப்பதற்கரியது. ஆனால் அவன் பெருமையையுணர்ந்து வழிபடுபவர்க்கு இறையருள் அலைபிலா ஆனந்தமாய தேனினைச் சொரிகின்றது. முத்தியைத் தந்து பொலிகிறது. அம்மட்டோ! முத்தியைக் கொடுக்கும்வேளையில் உயிரைப் பற்றிய தீராத நோயாகிய பாசபந்தத்தை நீக்குகிறது. இவ்வாறெல்லாம் செய்ய வல்லது; பாம்பை ஆபரணமாகத் தமது திருமேனியைச் சுற்றி அணிந்தவரும் பிறைச் சந்திரனைச் சடையிலே தரித்தவரும் சுடுகாட்டிலே நடமிடுபவருமாகிய சிவபெருமானுடைய திருவருளேயாகும். இக் கருத்துக்களெல்லாம் இப் பாடலில் அழகுற அமைந்திருக்கின்றன என்பதைக் கண்டு மகிழலாம்.

இறைவனை வணங்குவதால் என்ன பயன்? வழிபாட்டிற் செலவிடும் நேரத்தை வேறு உபயோகமான முயற்சிகளில் செலவிடலாமல்லவா?" என்று எண்ணுபவர்களும் கேட்பவர்களுமுண்டு. இவர்களுக்குப் பல பெரியார்கள் பலவித விடைகள் கூறியிருக்கின்றனர். நாமெல்லோரும் இன்பத்தை விரும்புகின்றோம். நிறைவான இன்பம் பெறுவதற்கு நிச்சய வழியாக, ஏணிப்படியாகக்கடவுள் வழிபாடே விளங்கும். இன்னும் சுருக்கச் சொல்வதாயின் இறைவழிபாடு புரிவோர்க்கு இறைவனின் திருவருள் நித்தியானந்தமாகிய முத்திப் பேற்றை அடைவதற்கான வழியை ஏணிப் படியை இட்டுக் கொடுக்கின்றது. மிக மிக உயர்ந்தோரெல்லாம் பெறுதற்கரிய பொருளாகவும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொருளாகவும் உள்ளது திருவருளே என்று கருதுவர். எமக்கெல்லாம் எய்ப்பில் வைப்பாக விளங்குவதும் திருவருளே. இக் கருத்துக்களையும் இவை போன்ற பல கருத்துக்களையும் கொண்டு விளங்கும் அரிய பாடல் இந்த பதிகத்திலுள்ளது.

"பேணித் தொழுமவர் பொன்னுலகாளப் பிறங்குளரல்
ஏணிப் படி நெறியிட்டுக் கொடுத்திமையோர் முடிமேல்
மாணிக்கமொத்து மரகதம் போன்று வயிரமன்னி
ஆணிக்கனகமொக்கும் ஐயாறன் அடித்தலமே"

வேனிற் காலத்தில் வெய்யிலிலே வழி நடந்தவன் நிழலைக் கண்டபோது அடையும் மகிழ்ச்சி அளவிடற்கரியது. இவ்வுலக வாழ்க்கையிலே ஏற்படும் துன்பங்களாகிய வெயிலினால் சுடப்பட்ட அன்பர்களுக்குப் புகலிடமாக, நிழலாக விளங்குவது இறைவன் திருவருளே யாகும். ஆன்மாக்கள் பாசபந்தங்கள் நீங்கி மருவிச் சென்றடையுமிடம் இறைவன் திருவடிகளேயாம். என்றும் நீங்குதற்கரிய வினைகளை நீக்க வல்லதும் இறைவன் திருவருளே ஆகும். தத்துவாதீதனாகி அளவற்ற ஞான ஒளியே வடிவமாகிச் சச்சிதானந்தனாய் விளங்கும் இறைவன் திருவருளின் பெருமையையும் அருமையையும் மனமுருக வைத்து கூறும் இப்பதிகத்திலுள்ள பின்வரும் பாடல் ஓதி மகிழ்தற்குரியது.

"கழலா துயர்வெயிற் சுட்டிடும் போதடித்தொண்டர்
துன்னும்
நிழலாவன என்றும் நீங்காப் பிறவி நிலைகெடுத்துக்

## திருவாசகமடத் திருக்கூட்டத்தின் சிறந்தபணி

திருக்கேதீஸ்வரம் திருவாசகமடத்தில் இம்முறை இடம் பெற இருக்கும் திருவாசக விழாவின் முன்னோடியாக மன்னார் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலை மாணவர்கள் இடையே திருவாசக மனனப்போட்டி நடாத்தப்பட இருக்கிறது. கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளில் மூன்று மாவட்டபாடசாலை மாணவர்கள் இதிற் கலந்துகொள்ள முடியும் இதற்கான ஏற்பாடுகளைத் திருவாசக மடத்தார் மேற்கொண்டுள்ளனர். மூன்று மாவட்ட கல்விப்பணிப்பாளர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம். இறுதிப்போட்டி திருவாசக விழாவில் இடம்பெறும். இதிற் கலந்து வெற்றிபெறும் மாணவர்களுக்கு தகுந்த பரிசில்கள் வழங்கப்படும்.

## அனைத்துலக ஆராய்ச்சி அவை

( 1 - ஆம் பக்கத்து வளர்ச்சி )

பல்கலைக் கழக இலக்கிய, இலக்கண, இதிகாச விஞ்ஞான பூகோளக் கலைமாணி விசேட நிபுணர்களும் ஏனைய அநுபவமுள்ள அறிஞர்களும் ஒருங்கிணைந்த அவைதோன்றவேண்டும். அந்த அவைக்குத் தனி அலுவலகம் வேண்டும். பரந்த நூலகம் வேண்டும். இன்னும் அலுவல்களுக்கின்றியமையாத சாதனங்கள் வேண்டும்.

மேலும் ஒரு அம்சத்தைப்பற்றி எடுத்து விரித்தாராயின் ஆராய்ச்சியின் போக்கும் நோக்கும் எவ்வாறமைய வேண்டும் என்பது புலனாகும்.

திருவாதவூரர் வரலாற்றினை எடுத்துக்கொண்டால் இந்தத் திருவாதவூரரைப்பற்றிய நுணுக்கவாராய்ச்சி பெரிதும் பயன்படும். திருவாதவூரிலேதான் கபிலரும் பிறந்தனர் என்று கருதப்படுகின்றது. சமயம், இலக்கியம் என்ற துறைகளில் மிக விசேடமான அற்புத நூல்கள் இயற்றிய ஒரு பெருஞ் சமயகுரவரும் பழம் புலவரும் இவ்வூரிற் பிறந்தார்கள் என்பதை இவ் அறிவாராயின் அறிவாராயின் இவ்வூர் தொல்பொருளுக்குரிய தாய்மையுடைத்தாகப் பேணப்படவேண்டுமே அவ்வாறே மாணிக்கவாசக சுவாமிகளின் வாழ்க்கையோடிணைந்த தலங்களும் ஊர்களும் உள்ளன. திருப்பெருந்துறை உத்தரகோசமங்கை, மதுரை, தில்லைவனம், திருவண்ணாமலை, "மேலும் மைக் கடலில் வைகல் ஒழி வைகை வளநாடு" என்றபடி இந்த வைகை பற்றி மிக நுணுக்கமாக விபரங்கள் தேடிப் பெறவேண்டுமல்லவா.

முன்னைய மூன்று யுகங்களைப்பற்றி மூளையை எண்ண விடாது கலியுகத்தைப்பற்றி மட்டும் கவனத்துக்கெடுக்கின 5085 ஆண்டுகளுக்குள்ளான நிகழ்ச்சிகள் யாவை? அவை நிகழ்ந்த காலங்கள் எவை என்று ஆராய்ச்சிக்கு எல்லையிட்டு ஆய்வு நடத்துதல் ஓரளவுக்கு ஆவலைக்கூடியதொன்றாகும்.

இந்த 5085 ஆண்டுக் காலத்துக்குள் பௌத்தம், அருகம், சமணம், கிறீத்துவம், இசுலாம் முதலிய சமயங்கள் தோன்றினவென்று அவ்வம் மதநூல்கள் எடுத்தியம்புகின்றன. இவற்றுக்கெல்லாம் முற்பட்டது இந்துமதம் — சைவ மதம் என்று எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். இதற்கு எல்லையிட்டு ஓர் ஆண்டு எவராலும் குறிப்பிடப்படவில்லை. புத்த சமயம் 2500 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகவே அத்தோற்றத்தினை ஓர் அடையாளமாகக் கொண்டு அதற்கு முன்னுள்ள காலத்தைப் புத்தருக்கு முன் இத்தனை ஆண்டு என்று குறிப்பிடுவது மரபாயிற்று. அவ்வாறே கிறிஸ்துவுக்குப் பின் இத்தனை ஆண்டு என்று கொள்வது இன்னமும் ஓர் மரபாயுள்ளது. இவ்வாறு எல்லை காட்டப்பட வேண்டியது வரலாற்று ஆசிரியர்களின் தேவைக்காகவெல்லாம்.

சில திட்டமான கால எல்லைகள்மட்டும் இருப்பதால் அவற்றைக் கொண்டே ஏனைய நிகழ்ச்சிகளின் காலங்கள் எவையென அனுமானித்து முடிபுகளும் கண்டனர் வரலாற்றுளர். இந்த முடிவுகள் எல்லாம் பொருத்தமானவையா என்பது ஆராய்ச்சிக்குரியதாகின்றது. என்னை? தனித்தனி முடிபுகள் ஒன்றோடொன்று முரணுவதனாலெனக. (வளரும்)

கழலா வினைகள் கழற்றுவ காலவனங்கடந்த
அழலா ரொளியன காண்க ஐயாறன் அடித்தலமே"

அப்பர் சுவாமிகள் திருவையாற்றுப் பெருமான் மீது பாடிய பதிகங்கள் இவைபோன்ற பல அரிய பாடல்களைக் கொண்டனவாய் விளங்குகின்றன. இவற்றைக் கருத்துணர்ந்து ஓதிப் பயன்பெறுதல் எமது பாக்கியமாகும். இவற்றை நாம் பெற்று உய்ய வேண்டும் என்னும் பேருட் கருணையினாலன்றோ தென்னாடுடைய சிவனும் எந்நாட்டவர்க்கும் இறைவனுமாகிய பெருமான் அப்பர் சுவாமிகளைப் பின்னும் சின்னாள் தமிழ் நாட்டில் வாழ்ந்து பதிகம் பாடச் செய்தனர்

சைவமாம் சமயம் சாரல்

## "என்றுமுள மூன்று பொருள்"

( முன் வளர்ச்சி 2 )

என்றுமுள மூன்றுபொருள்
ஈசனுயிர் ஆசையிவை
என்றுசொலும்
சைவம் எடுத்து
பதி, பசு, பாசம் என்றும் இறை, உயிர், கட்டு என்றும் அரன், ஆன்மா, ஆசை என்றும் இம்மூன்று பொருட்களையும் விளக்கவைக்கும் வகையிலே எடுத்து ஆள்வர் நூலார்.

இம் முப்பொருள்களிலே முதலாவதாகக் கூறப்படும் பதியை இறைவனென்றும் ஈசனென்றும் அரன் என்றும் கடவுள் என்றும் சொல்லிக்கொள்ளும் பொழுதெல்லாம் இப்பொருளுக்கு வரம்பிட்டு வரையறை செய்து இலக்கணம் அமைக்க முடியாமை இயல்பாகவே தோன்றும்.

(வளரும்)

## முன்னோர் தமிழ்....

[1ம் பக்கத்து வளர்ச்சி]

பிரகாசவித்தியாசாலையிற் குமாரசுவாமிப் புலவரிடம் கல்வி கற்கும் பேறுடையவர்களில் வித்துவசிரோமணி வேதியர் கணேசர் தலையாயவர். ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் முதலாசிரியராகவிருந்தவர் முருகேச பண்டிதர் அவர்கள்;

தாமோதரனார் ஆங்கிலக்கலைமாணியான சாதனை தனிச் சிறப்புடையது. பள்ளிப்பருவத்திலேயே பல்கலைப் பட்டதாரியான பேறு பெற்றவர். இவருடன் அதே ஆண்டிற் பல்கலைப் பட்டம் பெற்றவர். தாமோதரனாருக்கு வட்டுநகர் கலாசாலையில் ஆசிரியராக விருந்த விசுவநாதபிள்ளையுரமம் என்றறியும் பொழுது கற்றுத் தேறுதல் பற்றி விளக்கம் சொல்லவும் வேண்டுங்கொல்.

இத்தமிழ் வித்தகனார் இலக்கண நூல்களுக்குரிய பழைய உரைகளைப் பதிப்பித்ததுமன்றிச் சைவத் தொண்டாகவும் நூல்கள் வெளியிட்டிருப்பதை யார் தான் மறக்க முடியும்.

இந்நாட்டுக் கலைஞர் இந்திய நாட்டின் பெருமதிப்புப் பெற்றதுமன்றி உயர்நீதிமன்ற அரசாகவும் பணியாற்றும் தகைமையை அநுபவித்ததை எத்துணை? புகழ்பூத்த புலவரிவரின் நினைவாக முத்திரை வெளியிடுவது சிறப்பே,

"தாமோ தரனார்
தமிழ்செய் தவத்தின்சீர்
யாமோ தவுமென்னே!
வாக்கவும் - போமோதன்
யாழ்நாடு பூவுலகில்
யாண்டுமி லங்கவைத்தார்
வாழ்நாளிற் றூய்மொழிக்
[காய்
வாழ்ந்து".
— "இறை - ஒளி"

## Ramanathan......

(contd. in page 3)

called by many names, described by many religeons; the embodiment of ineffable degrees of spiritual happiness.

Oh! God of mercy who performest the dance of illimitable happinesss in the hall of spirstual happiness, —....

HINDU ORGAN

Fri. 22, 29-4-83
6, 13-5-83

## PRAISEWORTHY BUT NEEDS PROPER PERSPECTIVE

The idea of setting up a National Advisory Committee on Religious Education is by itself laudable. Advisory Committees adequately composed can be of immense assistance to any Department, most of all in the sphere of religious education.

But the actual working of such a committee becomes not merely arduous but also complicated for the simple reason that Religious Education is a peculiar sphere where divergent interests make co-ordination a problem. That is not all. The composition of these Religious Advisory Committees has all along been subject to the caustic criticism that the really learned in Religion are left behind while the gate-crashers who make a business of propaganda in the name of religion catch the eye of the Authorities. Hence competence is at stake.

Speaking for the Hindu Religion, we have to confess that there is a general view which differs in essentials from the particular view. Education in accordance with the tenets of Saiva Siddhantha cannot be formulated except in strict accordance with the teachings of the Saiva Agamas as interpreted in the Shastras and the Thirumurais. Thus those who take upon themselves the burden of advising on matters pertaining to the teaching of Hindu Religion, or who are saddled with that responsibility must know how to approach the subject and deal with the "general view" on the one hand and the "pertioular view" on the other.

It is in this context that we have to sound a note of caution in the appointment of members to the National Advisory Committee on religion.

On earlier occasions we had to make pungent criticism about the indifference shown by the relevant Authorities to religious societies that have an established right to represent their religion. To make it plain, we mean the overlooking of the Jaffna Saiva Paripalana Sabhai, the oldest Hindu Religious Incorporated Society by the Ministry of Hindu Affairs in connection with the World Hindu Conference held last year. Should we about to state that in any affair relating to the Saiva Religion, be it educational, or cultural, the Saiva Paripalana Sabhai has by its long-standing status and proven capacity become entitled to be invited for advice or participation, or both.

We also have to make it clear to the Authorities that in the selection of representatives to sit on committees, advisory and administrative, the stereotyped pratice of picking those who are at hand and easily available is systematically followed ignoring those in the out station.

The Minister of Education has been authorized by the Cabinet to set up a National Advisory Committee on Religious Education. The best course for the Minister to adopt at the outset would be to call a conference of Hindu Religious Organizations, Principals of Hindu Educational Institutions, High Priests of ancient Temples and leading Hindu Scholars to prepare a scheme for the furtherance of this decision of the Cabinet. A steering committee of such a Conference will be able to lay the guidelines for further actions and finally to name the members of the National Advisory Committee.

## SEMINAR ON ROLE OF RELIGIONS IN NATIONAL UNITY

(By J. K. Ratnanandam)

A Seminar on the above theme was held at the James Mather Hall, Methodist Memorial Church Wellawatte, recently under the chairmanship of Rev. Celestine Fernando.

*The Chief Speakers were*

HINDUISM: Miss. N. Kasippillai, Former Principal, Hindu Ladies' College, Colombo.

BUDDHISM: Mr. J. Samaranayaka, formerly of S. L. A. S. and now General Manager, Collettes.

CHRISTIANITY: Mr. J. V. Thamber, S. L. A. S. Additional Director, S. L. I D. A.

ISLAM: Mrs. Jexima Ismail, Principal, Muslim Ladies' College, Colombo

The consensus after 3 hours of talk and discussions was that Religions were primarily concerned with human personality and corporate relationship. Personality depends on one's character and one's relationship to God and man. It was also very evident that all the great Religions stressed the basic unity among mankind through expressions of love, brotherhood and compassion towards one another. Those who followed their respective religions in all sincerity and depth found a level of truth which was a true unity of minds.

Although there were differences in the practice of religions, there was oneness in their universal approach. Their prime concerns were universalism and humanism. Institutionalism of religions had, however, resulted in corruption creeping in it. Like any other power, religious power was also exploited by political power for selfish ends and party advantages. Divide and rule practices too had entered religious organisations.

The chairman in winding up warned against those dangers and allerted people regarding those pitfalls. Religious people should guard against subversion of religious ideals so as to enable religions play their rightful role in fostering harmonious relationships between man and man for the betterment of society.

Mr. I. K. Ratnaanandam, the convenor, thanked the speakers for their contribution and the audience for their keen participation and frank exchange of views and experiences in what is a pressing national issue today

31 A/1, Waidya Road,
Dehiwela.

**The Jaffna Co-operative Stores Ltd.**
**420, Hospital Road — Jaffna.**

WHEREAS Mrs. Kanagambikai Manickavasagar presently at No. 55, 36th Lane, Colombo - 6, has applied to the Directors of the above-named Company for the issue of a Duplicate Certificate in respect of Five (5) Ordinary Shares, numbered: 7574 - 7578, registered in her name, the original of which is represented to have been destroyed, lost or mislaid; NOTICE IS HEREBY GIVEN THAT if within two weeks here- of no claim is made to or no objection lodged with the undersigned the Directors will proceed to deal with the application for Duplicate, Certificate, the original of which will be deemed to have been cancelled.

420, Hospital Road,
JAFFNA.
6th, May, 1983.

C. SRI MANOHARAN,
Secretary

## Remembering Ramanathan Jayanthi



(Sir P. Ramanathan, the peerless patriot)

The following translation of the first verse of Taim anavar by Sri Ponnabalam Ramanathan is to be found in the Stratford Anthology of Favourite Quotations of Eminent Men and Women, compiled by Ronald Petrie, George G. Harrap, p. 176.

"What is That which of Grace is full, which is neither here nor there only but is everywhere as the Fullness of Peace?

What is That which, willing myriads of worlds to float in the expanse of float in the expanse of Its Grace, is the Life of all things living?

What is That which the mind cannot grasp and speech cannot define?

What is That which exists impartially, while countless Creeds in every land claim It, each as its own?"

Followed by:

The countries in which we were born are numberless; the names we bore are numberless; the relatives who surrounded us are numberless; the bodies we assumed owing to Vinais are numberless; the Vinais done by us are also numberless; our thoughts indeed are numberless; the applauses and enjoyments obtained us are numberless; the heavens and hells we have been to are numberless; the good Gods are of many varieties; the prevailing religions are numberless; therefore, discarding these' and searching our God with the aid of the intelligent Chit, let us worship him; the pure - formed one; the cloud which, emitting a rain of unthinkable joy, satiates the hearts and eyes of its followers, as if millions of rain clouds had poured down; the stay of the great Maunam

(Contd from page 4)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna. at their Saiva Prakasa Press 450, K. K S. Road, Vannarponnai, Jaffna. (Telephone No. 22336) on Friday, 22, 29-4-83 6, 13-5-83*

Editor in Chief:
R. N. Sivapirakasam

